

# SIVAPURANAM MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 5. திருச்சதகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

(10) ஆனந்தாதீதம்

(எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)



# திருச்சிற்றம்பலம்



மாறு இலாத மாக்கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொள் தாள்இணை
வேறு இலாப் பதப்பரிசு பெற்றநின்
மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினார்
ஈறு இலாதநீ எளியை ஆகிவந்து
ஒளிசெய் மானுடம் ஆக நோக்கியும்
கீறு இலாத நெஞ்சுஉடைய நாயினேன்
கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே 91





மைஇலங்கு நல் கண்ணி பங்கனே
வந்து என்னைப் பணிகொண்ட பின்மழக்
கைஇலங்கு பொற் கிண்ணம் என்று அலால்
அரியை என்றுஉனைக் கருது கின்றிலேன்
மெய்இலங்கு வெண் நீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினார்
பொய்யில் அங்கு எனைப் புகுதவிட்டு நீ
போவதோ சொலாய் பொருத்தம் ஆவதே





பொருத்தம் இன்மையேன் பொய்ம்மை உண்மையேன்
போத என்றுஎனைப் புரிந்து நோக்கவும்
வருத்தம் இன்மையேன் வஞ்சம் உண்மையேன்
மாண்டிலேன் மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கு எழுந்தருளி இங்குஎனை
இருத்தினாய் முறையோ என் எம்பிரான்
வம்பனேன் வினைக்கு இறுதி இல்லையே





இல்லை நின்கழற்கு அன்புஅது என்கணே
ஏலம் ஏலும் நற்குழலி பங்கனே
கல்லை மென்கனி ஆக்கும் விச்சைகொண்டு
என்னை நின்கழற்கு அன்பன் ஆக்கினாய்
எல்லை இல்லை நின்கருணை எம்பிரான்
ஏதுகொண்டு நான் ஏது செய்யினும்
வல்லையே எனக்கு இன்னும் உன்கழல்
காட்டி மீட்கவும் மறுவுஇல் வானனே

94





வான நாடரும் அறியொ ணாதநீ
மறையில் ஈறும்முன் தொடரொ ணாதநீ
ஏனை நாடரும் தெரியொ ணாதநீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா குள்ளும்
நைய வையகத்து உடைய விச்சையே.

95





விச்சுஅது இன்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்சகப் பெரும்
புலையனேனை உன் கோயில் வாயிலிற்
பிச்சன் ஆக்கினாய் பெரிய அன்பருக்கு
உரியன் ஆக்கினாய் தாம் வளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயினும் கொலார் இ
நானும் அங்ஙனே உடைய நாதனே

96





உடைய நாதனே போற்றி நின் அலால்
பற்று மற்றுஎனக்கு ஆவது ஒன்றுஇனி
உடையனோ பணி போற்றி உம்பரார்
தம்பரா பரா போற்றி யாரினும்
கடையன் ஆயினேன் போற்றி என்பெருங்
கருணையாளனே போற்றி என்னைநின்
அடியன் ஆக்கினாய் போற்றி ஆதியும்
அந்தம் ஆயினாய் போற்றி அப்பனே





அப்பனே எனக்கு அமுதனே ஆனந்தனே
அகம்நெக அள்ளூறு தேன்
ஒப்பனே உனக்கு உரிய அன்பரில்
உரியனாய் உனைப் பருக நின்றதோர்
துப்பனே சுடர்முடியனே துணை
யாளனே தொழும்பாளர் எய்ப்பினில்
வைப்பனே எனை வைப்பதோ சொலாய்
நைய வையகத்து எங்கள் மன்னனே

98





மன்ன எம்பிரான் வருக என்எனை.
மாலும் நான்முகத்து ஒருவன் யாரினும்
முன்ன எம்பிரான் வருக என்எனை
முழுதும் யாவையும் இறுதி உற்றநாள்
பின்ன எம்பிரான் வருக என்எனைப்
பெய் கழற்கண் அன்பாய்என் நாவினால்
பன்ன எம்பிரான் வருக என்எனைப்
பாவ நாச நின்சீர்கள் பாடவே.





பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந்து உருகி நெக்குநெக்கு
ஆடவேண்டும் நான் போற்றி அம்பலத்து
ஆடும்நின் கழற்போது நாயினேன்
கூடவேண்டும் நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்குஎனைப் போற்றி பொய்எலாம்
வீடவேண்டும் நான் போற்றி வீடுதந்து
அருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே 100



ஸ்ரீ மாணிக்கவாசகர்